உ

சிவமயம்

சிவசயிலப் பள்ளு

இஃது

ஆழ்வார்குறிச்சி

இராமநாதன் கவிராயர்

இயற்றியது

மேலப்பண்வண

சிவசயில முதலியாரால்

பதிப்பிக்கப்பெற்றது.

1918

All Rights Reserved.

முன்னுரை

ஆழ்வார்குறிச்சியென்று வழங்கும் பண்ணைமாரில் இற்றைக்குச் சுமார் 200 வருஷங்களுக்கு முன்னிருந்த இராமநாதன் கவிராயரால் இந்தப் பிரபந்தம் இயற்றப்பட்டது. இவரது வம்ச பாரம்பரையார் இன்னாரென்று இப்பொழுது நன்றாய்த் துலங்கவில்லை.

இந்நூலுள்ளே சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற ஆறை அழகப்ப முதலியாரவர்கள் எனது முன்னோர்களில் ஒருவர். இவர்களுடைய சிலாக்ய குண சீலங்களும் தானதர்மங்களுமே மேம்பட எடுத்துக் கூறப்படுகின்றன. இவர்களது பெயர் திருவிதாங்கூர் சரித்திரம் உள்ள அளவும் நின்று நிலவக்கூடியதாகும். 18-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் (சுமார் 1730) திருவிதாங்கூர் மகாராஜாவாக இருந்த மார்த்தாண்ட வர்மாவிற்கு விரோதமாக எட்டு வீட்டுப் பிள்ளைமாரும் மாடம்பிமாரும் கலகம் விளைத்துத் திரிசிரபுரத்துக்குச் சென்று, அங்கிருந்த நாய்க்கவம்ச அரசரிடத்தில் திருவிதாங்கூர் அரசுரிமை முந்திய

மகாராஜாவின் குமாரனுகிய பப்புத்தம்பிக்கு உ
தென்றும், மார்த்தாண்ட வர்மா அரசுபுரிதற்குப் ப
தியஸ்தரல்லரென்றும், இராஜ்யத்தை அதற்குரி
ரிடம் சேர்ப்பிக்கவேண்டுமென்றும், தெரி
கொண்டதின்பேரில், இவ்விராஜ்ய வுரிமை வி
காரத்தைத் தீர்த்துவிடும்பொருட்டு நாய்க்க அ
தமது பிரதிநிதிக்கு ஆணைகொடுத்தனர். பிரதி
யால் மேற்கூறிய காரியத்தை முடிப்பதற்கு சே
யோடு அனுப்பப்பட்டவர் ஆறை அழகப்ப மு
யாரவர்களேயாம். இவர்கள் திரிசிரபுரத்திலிருந்
பப்புதம்பிகூட உதயகிரிக்கு வந்து இராஜ்
யாருக்கு உரியதென்பதை விசாரணை செய்தார்க
அவ்விசாரணையின் பலனுக அரசுரிமை மருமக்க
தாயவழிப்பட்டதென்றும், மார்த்தாண்ட வர்மாவே
அரசராவரென்றும் ஏற்பட்டது. பப்புதம்பியி
பொய்கள் யாவும் வெளிப்பட்டன. இன்னும் கலக
கள் கிளைத்தெழாதிருக்கும்பொருட்டு தாம் கொண்
வந்த சேனையில் ஒரு பகுதி மார்த்தாண்டா வர்
ரிடத்தில் நிறுத்திவிட்டுத் திரிசிரபுரத்துக்கு முத

ரவர்கள் திரும்பினார்கள். இவ்விஷயம் சங்
ன்ணி மேனவன் அவர்கள் எழுதிய திருவிதாங்கூர்
த்திரத்தில் விரிவாகக் காணலாம். முதலியாரவர்
து வம்ச பாம்பரை கீழே தரப்படுகின்றது.

தமிழுக்குரியனவாகச் சொல்லப்படுகின்ற
தாண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள், இது
ழத்திப்பாட்டு என்ற வகையைச் சார்ந்தது. அப்
ட்டிற்குரிய சகல லக்ஷணங்களும் இதன்கண்
மைந்திருக்கின்றன.

இந்நூலுள்ளே துதிக்கப்படுகின்ற சிவசயில
தசுவாமி கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும்
ஷத்திரம் மிகவும் சிறப்புடையது. திருக்கோயில்
மற்கே பார்த்துள்ளது. சகல உத்ஸவங்களும் ஆல
த்தின்றும் 3 மைலுக்கு அப்பாலுள்ள ஆழ்வார்
றிச்சியில், பங்குனி மாதத்தில் வெகு விமரிசை
ாய் நடைபெறும்.

இந்நூலின் ஏட்டுப்பிரதிகளைப் பரிசோதித்து
ச்சிடும்போது உடனிருந்துதவிய திருநெல்வேலி
க-ா-ா-ஸ்ரீ வக்கீல் வையாபுரிபிள்ளை அவர்களுக்கு
கை கடமைப்பட்டுள்ளேன்.

மே. சி.

- எழிச்சியப்ப முதலியாரென்ற மயிலப்ப முதலியார் 839-ளு
  - குமாரசுவாமி முதலியார்
  - ஆறை அழகப்ப முதலியார் 851-ளு, 905-ளு
  - சங்கரநாராயண முதலியாரென்ற சிவசைல முதலியார் 886, 893, 895-ளு
    - மயிலப்ப முதலியார் 910-ளு
      - எழிச்சியப்ப முதலியார்
        - சிவசைல முதலியார்
          - அழகப்ப முதலியார் 970-ளு—1040-ளு
          - எழிச்சியப்ப முதலியார்
            - சிவசைல முதலியார்
            - சங்கரநாராயண முதலியார்
            - சுப்பிரமணிய முதலியார்
            - இராமலிங்க முதலியார் 1010-ளு—1069-ளு
              - மே. சிவசைல முதலியார்

குறிப்பு.—மேற்கண்ட ஆண்டுகளில் இவர்களிருந்ததாக எட்டு சாஸனங்களில் காணப்படுகின்றன. மாவை குமாரசாமி முதலியார் 1829- மகன் ஆறை அழகப்பமுதலியார் ... மகன் அழகப்ப முத

உ

சிவசயிலப் பள்ளு

காப்பு — விநாயகர்

ருதமி பூன்பூர்ச் சிவசயில நாயகர்மேற்
சையை நன்றாகப் பாடுதற்கென்-னுள்ளநினைக்
ணனத்தனையான் காண்பரியோன்தேற்றதுதிக்
ணனத்தனையான் காப்பு.

கடவுள் வணக்கம்

திருமால்

தாங்கு செஞ்சடையினர் விடையினர்
நிறைந்துயர் பரம்பொருளின ருளினர்
நீறிலங்கிய மேனியர் ஞானியர்
நேசத்துறைவோர்
ர்தாங்கத் தாரினர் சீரினர்
இடையன் வெட்டிய சிரசினர் பாசின
ரென்றுளத்தினிலிருப்பவர் சிவசயி
லேசர் பள்ளிசைக்கே,

கார்தாங்கு மெய்த்திடத்தினர் வடத்தினர்
கமலமென்றலர் நாபியர் கோபியர்
கலைசிலை பறித்தவர் முறித்தவர்மத
கரிக்கிடர் தவிர்த்தோர்
பார்தாங்கர வணையினர் துணையினர்
பாதர் முன்வரு பெரியவ ரரியவர்
பங்கயமயில் கொங்கையின் மருவிய
செங்கையர் துணையே.

நாடகள்

செஙகையின்மழுப் பதித்தவர் கதித்தவர்
சிந்துரத்துரி யுரித்தவர் தரித்தவர்
திரைகடலைத்தென் கரையினர் வரையின
செம்மேனியனுர்
எங்களுக்கருள் தெரிபவர் புரிபவ
ரிமையமங்கைகைப் பிடித்தவர் நடித்தவ
ரெழிலழகப்பன் பணிபவர் சிவசயி
லேசர் பள்ளிசைக்கே,

ங்கலி யெனைப் பிடித்ததை யடித்ததை
டுத்தவள் தடுத் தவள் நன்மை கொடுத்தவள்
திநாவினி லுறைந்தவ ணிறைந்தவள்
ல்வாணுதலாள்
கயத்தலர் வீட்டினள் பாட்டினள்
ணைத்தெழுந்துணைத் தனத்தினள் கனத்தினள்
ாரதிபதி யென்ன விருத்துமென்
ாரதி துணையே.

சுப்பிரமணியர்

யில்வைத்தவெண் மதியினர் கதியினர்
தவமுடித்தவரிதயத்தில் வைத்தவர்
கனி மேருவை வளைத்தவர் முளைத்தவ
லமாலையினர்
யெடுத்த கபாலத்தர் சூலத்தர்
ார்வேந்தனுஞ் சங்கர நாரணன்
ாவியசிவ சயிலேசர்க் கிசை
ள்ளேசலிலே,

மெலிவுறு சொற்கள் வருகினுங் கருதின
மேனத்தெழு தாளச் சுருதிகள்
விலகினுந் தமிழ்ப் புலவர் தள்ளார் சற்றும்
விள்ளார் குறையே
வலவையைப் புணாறுமுகன் துணையென
வருகுகனறு முகனுமென் னவுடை
மங்கையுங்கண மங்கள சொற்களை
வருவிப்பவரே.

நூல்

பள்ளியர்கள் வரவு

கலிப்பா

ஜனை வென்றோர் சிவசயில நாயகனார்
தமிழ் நன்னாட்டின் முறைவளமெலாமுரைக்க[கப்
தடவுகண்ணுநெற்றிமஞ்சணைப்பொட்டுஞ்சிறக்
யுடனே யிரண்டு பள்ளியர்கள் வந்தாரே.

மூத்த பள்ளி வரவு

சிந்து

ட்டு மஞ்சணைப் பூச்சுங் கபோலமுங்
குழைத்த சந்தன மதில் வரிக்கோலமுங்
குல்லலமென் முலைக்குடமு நீலக்
கல்லொளி வடமுஞ்
ட்டு கொண்டையின் மேற் பிச்சி மாலையுந்
துவளிடையிற் பட்டாங்குடைச் சேலையுஞ்
சுருவத்துக்கிணங்கிய குறுஞ் சிரிப்பும்
புருவத்தினெரிப்பும்

வேட்டு மதுக் குடித்தசை நெளிப்பும்
வெடிப்பாகக் கொச்சியின் மஞ்சட் குளிட
வீசு செங்கையி னிறைந்த பொற்காப்பு
மிஞ்சிறுமாப்பும்
பூட்டிய தங்கத்தாலிக் கந்தாமும்
பொலிந்தோங்குசுந்தாமு மதாகப்
புகழன்பூர் மூத்த பள்ளி
தோன்றினளே.

இளைய பள்ளி வரவு

குங்கும களபங் கமழ் கொங்கையு
மிங்கித வசனம் பகர் சங்கையுங்
குழைத்திடு திருநாமமுந் தலைப்பணி
யிழைத்துகி லுடையும்
பங்கய வாண்முகத்தினி லிருக்குஞ்
செங்கனிவாய் முறுக்குங் கதுப்புக்குள்
பாக்கொதுக்கிய புடைப்பும் விரல்கொடு
வேர்த்ததைத் துடைப்புஞ்

ங்கையி னிறை யங்குலித் துடியுஞ்
சீவிய குழல் பூவிரி முடியுங்
தெட்டிய விழிக்கடையும் நடைக்
கெட்டிய நடையும்
கையி லொரு சங்குந் திகிரியு
மைத்தவர் பதந் துதித்திவை யுடனே
பத்தாளநல்லூர்ப் பள்ளி யிளையவள்
தோன்றினளே. 3

பள்ளன் வரவு

கலிப்பா

கழித் தாமன்பூர்க்கத்தர் சயிலேசர் பண்ணைப்
யடி மைக்குள்மிஞ்சு போர்புரிகட் பார்வையு
யசைந்தசைந்து தள்ளாடி யாடிரண்டு [மாய்த்
பர்கள்வந்தபின்புபள்ளன்வந்துதோன்றினனே
4

பள்ளன் பெருமை

சிந்து

மாகத் தொட்ட
டைச்சல் லடத்திற் கட்டுப்

பட்டுத் தாளின் முட்டத் தொங்க
விட்ட சம்பிரமமும்
வெட்டுக் கொட்டிகுன் மிகக்காய்த்
திட்ட கைத் தடியுமெலு
மிச்சம்பழம் வைத்திட மேல்
வீசையு முறுக்கும்
குட்ட வயிற்றுக் குண்
முட்டக் குடித்தமது வெடுத்துக்
கொட்டக் குமட்டி யேப்ப
மிட்டே வரு மிழுப்புங்
கட்டிய கச்சையுமாய்க் கை
தட்டி முறையாடிக்கொண்டு
கடும்போர்க் கெதிர் சயிலக்
குடும்பன் வந்தான்.

எங்கள் சயிலேசர் பதப்
பங்கயந் துதியா நாவை
யிழுத்துத் தார்க் கம்பாற் குத்திக்
கிழித்தெறிவேன்

நரர் நதிக் கடனைத்
தென்கரையாரைப் பதி யார்
ங்க ணெஞ்சிற் கொழு வேத்தித்
ரிசடிப்பேன்
கவன் பூர்ப்புகழ் கேளாத
லுத்தர் செவிப் புற்றென்று கைக்
கொட்டினூலே முற்றும்
வெட்டுவேன்
்கரனைப் பெற்ற வரைக்
கும்பிடார் செங்கையைப் பின்கட்
டாகக்கட்டிவடத் தாலே
நோகவடிப்பேன். 6

அவர்கள் முறையே வரலாறு

கலிப்பா

ங்கனத்த பள்ளும் பாடுமென்னை யிந்த்ரனென
ஞ் சிவசயிலநாதர் முள்ளி நன்னாட்டில் [கள்
களவேற்கண்ணிணைச்செங்கனிவாய்ப்பள்ளியர்
டமொடு தங்கள் குலம்வீறு சொல்லிக்காட்டின
[ரே. 7

சிந்து

தண்கடனைத் தென்கரையில் சிவசயிலநாதரெங்
தளைக்கவே லிங்கமாக முளைத்த நாளில்
கண்கொள்ளாத பற்றும் வயற் காடுமலையுளவுங்
காட்டுளவும் பண்ணைவைத்துக் கூட்டுமௌவ்
பெண்களுங்கைப்பிள்ளைகளுங் கொத்தடிமையா
பேத்தியைப் பெற்றவட்கு மூத்தவள்விலை [
வண்கமலமங்கைதின மெங்களுநிறைந்தமுள்ள
வளநாட்டு மூத்தபள்ளி நானே ஆண்டே.

சமஸ்தான பதிஆறை அழகப்பன் முழுதுஞ்செ
சர்வமானியஞ் சிவசயிலக் கோவில்
உமைத்தானு மகிழ்பண்ணைக் குடும்பனெனத்தா
ஊரில் வந்தானெனைக் கண்டானுளமருண்ட
அமைத்தா லமைபடாமற் கொடுத்தா
னென்னையன்கையி [ண்டா
லன்பதுபொன் தாலிகட்டிப் பின்பெண்ணைக்
பமித்தான் கிடப்பானந்தமுலைக் கூடவனுக்கே
பள்ளி யிளையவளும் நானே ஆண்டே

னுபுகழ்க் குமரப்பன் மன்னனுக்கு மாமனென
ந்த துரை யழகப்பன் மருவார் சிங்கஞ்
ா திமண்டபந்திருச் சுற்றுமண்டபங்களெல்லாஞ்
ம்பிரமமாகச் சிவசயிலேசர்க்குப் [றைதீர்த்த
ன்னைப் பொன்னென்று பாராமற்றிருப்பணிகு
கழ்க் கோவிலுக்கு நித்தியம் பூசைக்குநெல்லுஞ்
நெல்லுண்டாக்கி யபிஷேகத்துக்குக்கன்னல்வா
ணம்பயிரிடுஞ்சயிலக்குடும்பனானே ஆண்டே [ழை
10

நாட்டுவளம்

கலிப்பா

ாகரமணீய முலையுமிசைவாய்ச் செழுந்தேன்
கரசமீறுமிசைப் பள்ளியர்கள் வாய்திறந்தே
கரமாயன்பூர்ச் சிவசயிலநாயகனார்
கரிகமாகவரு நாட்டுவளஞ் சொல்வாரே. 11

சிந்து

னகரத் தெயில்வானைக் கடக்குந்
திருவிழாத் தெப்பந் தேர்கணடக்குந்

கனமுலாவிய காவினில் வாழுங்
கரும்புவாழைக் கனியைத்திருக்குந்
தனமுளோர் தினஞ் சூதுகளாடுஞ்
சதுக்கைமேன் மஞ்சுதானே தவழு
மனமகிழ்வாய்ச் சிவசயிலேசர்
வளமைசேர் முள்ளி நாடெங்கணுமே.

தோப்பெலாங் கருமந்திகள் தாவுந்
தொகுப்பதாய்ப் பனசச்சுளை தூவுஞ்
சீப்புலாவுங் கதலிக்குள்ளேகிச்
சிறிய பூங்கிளி தின்றுகொழுக்கு
மீப்பிலாவிருல் வைக்கத்தின் மேவு
மினிய தேன்முடிபோலவே தாங்குந்
தாப்பெலார்க்குங் கஜேந்திரமோட்சந்
தழைத்துவாழ் முள்ளி நாடெங்கணுமே.

துடிக்கக்கண்ட துதரத்திற் கர்ப்பஞ்
சுருங்கக்கண்டது மாதர்மருங்குல்
அடிக்கக்கண்டது சூட்டுநெற்போர்க
ளறுக்கக்கண்டது நெல்விளை செந்நெல்

மடிக்கக்கண்டது நாகாரவல்லி
மறுக்கக்கண்டது வாய்மடைத்தண்ணீர்
விடத்தைக்கொண்ட சிவசயிலேசர்
விரும்பிவாழுமன்பூ ரெங்களூரே. 14

கொண்டலேறிப் பொதும்பரிற்கூடுங்
குலவுகேகயங்கண்டு நின்றாடும்
வண்டலோடையி லாம்பன்மலரும்
வனிதையர்கள் தனங்கண்டலரும்
முண்டகத்தினிற் சங்கினுமுத்த
முட்டையென்றனஞ் சேர்த்திடுநித்த
ண்டர்நாயக ரானையைக் காத்தவ
ரடிகையூ ரெங்களூர் பண்ணையாண்டே. 15

தறிக்கப்பட்ட துண்டாலைக்கரும்பு
தவிக்கப்பட்டது சாதகப்புள்ளு
பறிக்கப்பட்டது செங்நெற்களைகள்
பகைக்கப்பட்டது பாம்பொடு கீரி
நறுக்கப்பட்ட தனல்படுகீரங்
கொதிக்கப்பட்டது கோடையின் வெய்யில்

சிறக்கப்பட்டது கடனைக்குத் தென்கரை
 சிவசயிலேசர் நாடெங்களுடே.

உருகக்கண்டது கம்மியர் தீயிற்பொன்
 னுலையக்கண்டது வாழைப்பழங்கள்
கருகக்கண்டது சர்க்கரைக்கூன்கள்
 கலங்கக்கண்டது காமுகர் சிந்தை
திருகக்கண்டது காட்டினிற் கள்ளி
 தீயக்கண்டது தீநெற்புழுங்கல்
பொருநைக்குக் கிழக்காங் கரைக்கோவில்
 போரானை காத்தவர் நாடெங்களுடே.

நாலுமாமறைதேர் பெரியோரும்
 நடனவான் பரிமன்னியவாருஞ்
சூலபாணிச் சிவசயிலேசர்
 துலங்கு கோயிற்றெருழின் மடவாருங்
காலகாலத்திற் றுனஞ்செய்வோருங்
 கடனையாறுங் கலைதமிழோதுஞ்
சீலனுறையழகப்பன் பேருஞ்
 சிறந்த கீர்த்தியன் பூரெங்களூரே

மன்னர் மேடையிலே குதித்தேறும்
வரால்கள்சூழ் தாம்பிரவன்னியாறுங்
கன்னல்சூழ்வயற் சென்னற்கண்ணாறுங்
கருடவாகனர் வாழ்கின்றவீறுஞ்
சன்னிதானத்திற் சேவைசெய்பேறுஞ்
சகலபேர்களும் வந்திளைப்பாறும்
அன்னதான மடங்களைமீறு
மடிகையூ ரெங்களூர் பண்ணையாண்டே. 19

குயிற்கூக் கேட்டல்

கலிப்பா

ந்தமிழ்சேரன்பூர்ச் சிவசயில நாயகனார்
ாந்தமுள்ளி நாரேர் தொகுத்துவளங்கூறிடபின் [டு
தனையகொம்மைமுலைப்பள்ளியர்கணின்றுகொண்
ாந்தலர்பூந் தேமாங்குயிலைக்கூவென்பாரே. 20

சிந்து

ன்டமிழோர் மிகுந்த புகழன்பூரின்மேவு மெங்கள்
சயிலேசர் தழைக்கவே கூவாய் குயிலே
ாடனைய மதுரமொழிக் கவுரியுமையாள்பாம
லியாணி வாழவே கூவாய் குயிலே (1)

நலனுற சிவாகமத்தின் முறைவழியே பூசைசெய்ய
நம்பிமார் தழைத்தோங்கக் கூவாய் குயிலே
பலனுறமென்றேகோயில்தானத்தாருடனிறைஞ்சு
பரிசனங்கள் வாழவே கூவாய் குயிலே

அனந்தரங்க சமுத்திரத்து மகாசனங்கள் காலசந்தி
அபிஷேகனைவேத்தியம் மிகக்கூவாய்குயிலே
தினந்தொறும்நன்றாய்நடத்துங்கட்டளேயுமவர்களு
செழித்தோங்கி வாழவே கூவாய் குயிலே [மே

தண்டிகையிந்திரனுறை யழகப்பன் கோயிலுக்குத்
தலத்தாசு வாழவே கூவாய் குயிலே
மண்டலவேந்தன் நம்பி சங்கரநாரணராஜன்
வங்கிசமெலாந் தழைக்கவே கூவாய் குயிலே

உத்தமன் தென்னுறை நகராதிபனுழா பூசை
யுச்சந்திக்கட்டளை சிவனார்க்கு
அத்தசாமக்கட்டளே யிவைமூன்றும் நடத்துதுரை
யழகப்பன் வாழவே கூவாய் குயிலே

லயின்மண்டபஞ்சிவசயிலர்சன்னதிமண்டபம்நா
தழைத்த தெப்பக்குளத்தோடக்கிரூரஞ் [ளுக்
முடன் மகிழ்ந்துகட்டு மாறையழகப்பனெனு
தெய்வேந்திரன் தழைத்தோங்கக்கூவாய்குயிலே(6)

ழைத்த குழலார்வேள் குமரப்பன் சிவசயில
மயிலப்பன் வாழவே கூவாய் குயிலே
-வொத்த திருநாவுக் கரசு துணை மயிலப்பன்
நன்மதுரை வாழவே கூவாய் குயிலே (7)

டுக்கணைக் கெழுதுஞ்சூரிய தேவனெனுந்தன்ம
நன்மைபெற்று வாழவே கூவாய் குயிலே [வான்
டுக்கணைக்கறியா ராமநாதன் கவிராயன் மொழிப்
பள்ப்பிரபந்தம் வாழவே கூவாய் குயிலே (8)

ாருணைநதிபாய் பரவுங்கடனை நதிப்புறவுமிரு
பூத்தோறும் செல்விளையக் கூவாய் குயிலே
ணமறிந்தே திங்கண்மும்மாரியும் பொழிந்து
சயிலேசர் தழைத்தோங்க கூவாய் குயிலே (9, 21

மழைவேண்டிக் கடவுள் வணக்கம்

கலிப்டா

மங்களமாய் வானின் மழைக்குறியுண்டாம்படிக்கு
பங்கயநேர் கண்ணாள் பாமகலியாணி பங்கர்
திங்களணிவேணிச் சிவசயிலநாதருடன்
தங்கள் குலதெய்வமள்ளர் தாம்பணியச் செய்வா

சிந்து

மழை தருவாய் மழை தருவாய்
மணிகண்டனே மழைதருவாய்
குழைதரு பூங்காவில் வாழுங்
குளத்தூரய்யர் மழைதருவாய்
தெள்ளுதமிழகத்தியனே
செகந்தழைக்க மழைதருவாய்
வெள்ளிமலைச் சாத்தாவே
விரைவினுடன் மழைதருவாய்
வெள்ளைக்கல்லுப் பூதத்தானே
விளைபயிருக்கு மழைதருவாய்

வுள்ளத்துறை காவலனே
வொருநொடியில் மழைதருவாய்
கலகவிழிவலவை புணர்
கணபதியே மழைதருவாய்
அலுவலெலா மொழித்திடும்வே
லறுமுகனே மழைதருவாய். 23

மழை வரவு பார்த்து ஓர்தல்

கலிப்பா

ய்வதிலை போற்றியபின் சீர்பெறு மன்பூர்ச்சயிலர்
வசமயத்தார் தமதருளினுன்மாரி
ய்வதிலே தாழ்ச்சியிலைபெய்யுமென்று விட்டுணுவு
ழவரவுகண்டு மள்ளர் வானையெட்டித்தாவினரே 24

சிந்து

தென்பொதியமாமலையும் வெள்ளிமலையுமொரு
சேகரமாய்மேகம் வெகுவாக மூடிச்சு
பின்பு களக்காட்டுமலையுங் கனத்தசீர்வளம்
பெற்ற குற்றாலர்மலையும் சுத்திக்கொண்டுது

மின்பலவாய் வெட்டுது காற்றொன்றுபட்டதுநா
வெள்ளம் வரக்கிட்டு திந்திரவில்லுமிட்டுதென்
றன்பருக்கருளுமன்பூர் சிவசயிலேசர் பண்ணைக்
காத்திபள்ளர் குதித்துக்கூத் தாடிக்கொண்டா

மழை பெய்தல்

கலிப்பா

தெண்டிரைநீருண்டுசிவசயிலநாதரருள் [முமொன்
கொண்டுவரைகொண்டிரைச்சல்கொண்டுகொண்ட
மண்டுபுகழ்சேர்ந்தமனைவாழ்குமரப்பன்கொடைபை
கண்டிதுவுமப்படிக்குக்காலூன்றிப் பெய்ததுவே

ஆற்று வரவும் அதன் சிறப்பும்

சிந்து

பெய்த வெள்ளங் கடல்போற் பெருகப்
பிலங்கொண்டே வெளித்தலங்கண்டே
பிந்தித்தறுகு மஞ்சையும் பில
வந்தக்குறவர் புஞ்சையும்

பைதிகழ் மலைப்பணியையு மதி
 லெய்திய நிலக்கணியையும்
 பருக்குங்களப மருப்பையுங் குடி
 யிருக்கும் பளியரிருப்பையு
மெய்தனில் வரிப்புலியையுந் திரட்
 டய்வனக்கன பொலியையும்
 விரிந்த சந்தனத் தேக்கையு மதி
 விருந்த பைங்கிளி யாக்கையுங்
கைதிரைக்கொடு பிடுங்கி யிழுத்துக்
 கதித்துக் குதித்து மதிக்கவே
 கந்தன்பதத்தைப் பணிந்து பாலை
 யந்த நிலத்திற் புகுந்ததே. 27

புகுந்தவெள்ளம் பாலை நிலத்திற்
 புறப்பட்டே பெருஞ்சிறப்பிட்டே
 பூத்த கள்ளியின் மூட்டையும் மடிப்
 பொடிச்சுடுங்கனச் சூட்டையு
மிகுந்த வேடர் வீட்டையும் பருந்
 தமைந்து மேவு கூட்டையும்

வேற்கண் மறவர் வில்லையு மவர்ப்
பொறக்குங் கவணின் கல்லையு
மகன்றபுளினத் தெருவையுந் தசை
முகந்தபுளினத் தெருவையு
மங்கொன்றினவர் படலையும் பதப்
பங்கொன்றினவ ருடலையுந்
தகர்ந்து சிதறப்பிடுங்கி யுருட்டித்
தள்ளிப்பாலைக் கிழத்தியாந்
தல்விசரணைப் புல்லித் தொழுது
முல்லைநிலத்தில் நடந்ததே 2

நடந்த வெள்ளமீறியே முல்லை
நாலுதிசையு மேறியே
நாலுமுறியிற் பாலையுந் தடிக்
கோலையும் விரியோலையுங்
கிடந்த நல்ல கட்டிலும் விழுந்
துடைந்துகொல்ல வட்டிலுங்
கிளைக்குள் வந்துணும் விருந்தையு மண்ணின்
முளைத்தெழு சிறு குருந்தையும்

யடர்ந்த சாமிப்பயிரையும் பெண்கள்
கடைந்த பானைத் தயிரையு
மாயர்பாடியிற் கோனையு மதின்
மேயவோடிய மானையுந்
துடர்ந்து திரைக்குளமிழ்த்திப் பாலை
யடைந்து பதத்தை வழுத்தியே
சுழிகள் சுழித்துச் சுரந்து நிரந்து
மருதநிலத்திற் பரந்ததே. 29

பரந்தவெள்ள மருத நிலத்திற்
பற்றியே யெங்குஞ்சுற்றியே
பசியநெட்டிலைக் கன்னலைச் சிறு
குழவிகொட்டிலைச் செந்நெலை
சுரந்த முலைக்கண் மேதியைத் திரு
விருந்து நிலைக்கும் வீதியை
சுற்றிய புதுத் தெற்றியைத் திசை
யுத்தரமுகக் கொத்தியை
விரிந்த சிறைப்புள் ளஞ்சத்தை நறை
சொரிந்த மடுவிற் கஞ்சத்தை

விசைகொண் டிழுத்துப் பிரட்டி யுருட்டி
விழுந்த கம்புளைச் சுருட்டியே
புரந்தரன் பதமிணங்கி வணங்கி
புதிய பெரிய குளங்கள் கால்
பொய்கை நிரப்பித் திரைக்கை யெடுத்து
நெய்தனிலத்திற் செழித்ததே. 3

செழித்த வெள்ளநெய்த னிலத்தைக்
கிழித்துச் சுழித்துத் தகர்த்திட்டே
திருகுபுன்னையுஞ் சினையையு மதிற்
பரவர்மன்னிய மனையையுங்
கொழுத்த தேட்டுமீனையு மதை
யவித்த வீட்டுப் பானையுங்
கொத்துப்பவள வளத்தையு முவர்
தத்திப் பெருகுகுளத்தையுங்
கழிக்கரைப் புதுவண்டலும் வெகு
நெருக்கமுற்றிடு கண்டலுங்
கையுறை யெனக்கொண்டு வருணன்
செய்யபதத்திலிவை யெலா

மிழுத்து வலித்துக்குவித்துக் கலங்க
ளிசைந்து சுமந்துமணப் பெண்போ
லெழும்பிவாரி மகிணனி டத்தில்
மகிழ்ந்து கூடிமணந்ததே 31

மணந்தவாரித் திரைக்கை யெடுத்து
மருவித் தழுவக் களிகொண்டே
வாலசூரிய னுதய கிரியை
வளைந்து பிடுங்கடக்கவே
பிணங்குகெழிறுஞ் சிறிய வுழுவை
பெருவிலாங்கு நெடுவிரால்
பிலத்தவாளை பரவை குரவை
பெரியபஞ்சலை தேளிமீன்
நிணங்கொள் கோழைசாளை மயிலை
நெடியவோலை வாழைமீ
னீந்தும் பெரிய திமிங்கலம் பொத்தி
நிறைந்த பசலி யெண்ணைமீன்
இணங்கி யெதிர்கொண்டேறவே சிவ
சயிலநாதர் கடணையா

றிருகரை தத்திப்பெருகி வார
புதுமை பாரும் பள்ளீரே 32

குதிப்புக் கடலிற் கரும்பு தேடு
கொழுவைபயிந்தி மயிந்திமீன்
கூறுமாரலுப்பு வாழை
குருகல்லீரை கெண்டைமீன்
கதித்து வளர்ந்த கூணியஞ் சிலை
கசலி கும்பலங் கொழுத்த மீன்
கரியநெடிய பரமீன் மத்தி
கடந்த சம்பா நொறுக்கிமீன்
துதிக்கை நெடிய ஆனை மீன்
சுருக்கருங் கண்ணியணையிலே
துள்ளிக் குதித்துக் குளத்திற் குதிக்க
சென்னல் வயற்குள் குதிக்கவே
புதுப்புனல் கொடுமெதிக்கவே சிவ
சயிலநாதர் கருணைபோல்
பொருநையாறு பெருகிவார
புதுமை பாரும் பள்ளீரே 33

பண்ணைத்தலைவன் வரவு

கலிப்பா

த்தமிழோர் கொண்டாடு முள்ளிநாடெங்குமலை
த்துபுனல் கண்டபின்பு சாக்கிரதையா யெழுந்தே
த்தமகிழ்ந்தன்பூர் சிவசயிலநாதர் பதங்
கைத்தலங் கொண் டேத்துபண்ணைக்காரன் வந்து
[தோன்றினனே 34

சிந்து

க்கலிற்குழறு நாக்குங் கொக்கிறகு போற்பத்து
வெள்ளைமயிராய் நரைத்துத் துள்ளுமீசையுங்
க்கல்போற் குறைத்திருமல் கக்கியவாயுஞ் சாய்த்த
கொண்டைக்கட்டுமுறுமாலைமண்டைக்கட்டுமாய்க்
கக்குள்ளே புகைச்சுருட்டுஞ் சக்கிமுக்கியும்பஞ்சுங்
கல்லும் வெள்ளைப் பல்லுங்குந்தந் தள்ளுகண்ணு
[மாய்
க்கனார் சிவசயிலர் பத்தெலாம் பயிரேத்த
மொண்ணைக்காலுமாக வந்தார் பண்ணைக்காரனார்
35

அன்பூரின்மூத்தபள்ளி வாடியென்பாரா முனக்
காகாதுபோடி யிந்தமோடி யென்பாராம்
பின்பே திளையபள்ளி கள்ளியென்பாராம் சுற்றும்
பேசக்காணே மென்றவளை யேசப் பார்ப்பாராம்
பொன் போதவில்லையே கொடுக்கவென்பாராமந்த
பூச்சைக்கண்ணிமேல்த் தமக்கு மூர்ச்சையென்ப
தன்பேரில் விசுவாசி பள்ளனென்பாரா மவன் [ரா
தாறுமாறறிந்த பண்ணைக்கார நயினார் 3

மூத்தபள்ளி வரவு

கலிப்பா

மெய்யழகரன்பூரின் மேவுஞ் சிவசயிலர்
செய்யழகாய்மிஞ்சுபயிர்செய்வதற்குப்பள்ளனெங்
மையழகு கண்ணியென்றுவந்தபண்ணைக்காரன்மு
கையழகிமூத்தபள்ளிகாட்சிவைத்துகண்டாளே[செ

மூத்தபள்ளி முறையிடுதல்

சிந்து

குப்பிடுகிறேன் விழுந்துகும்பிடுகிறேன் மூன்று
கோழியுமவலும் வைத்துக் கும்பிடுகிறேன்
கம்பினாலடியாதேயுங் கும்பிடுகிறேன் கருங்
காக்கை மூக்கு நயினாரே கும்பிடுகிறேன்
வம்புவார்த்தை சொல்லாதேயுங் கும்பிடுகிறேன்சிறு
வளைதடிக் கையனாரே கும்பிடுகிறேன் [ளும்
நம்பொனாது பள்ளன்செய்யும் வஞ்சகமெல்லாங் கே
நானுரைத்துப் பண்ணையாண்டே கும்பிடுகிறேன் 38

கொட்டிலி லொருநாள்வரச்சொன்னாலும்வாரான்வங்
[illegible]டிக் கலந்தென் காமக் குறைச்சலுந்தீரான் [து
கட்டிய நீரணைகுளங் கால்களைப்பாரான் பின்
கணக்கவே வுடைக்கு முடைப்புகளைத் தூரான்
வெட்டின வயல்கள் வரப்பின்குறைவெட்டான் தின
மேய்ந்துவருமாட்டையந்திசாய்ந்தாலுங்கட்டான்
வொட்டியபாசங்களெல்லா மத்தாளநல்லூரில்ப்பள்ளி
லூளைவாய்ச் சிறுக்கிக்கே வுழைக்கிறானாண்டே 39

மெள்ளவே நானுரைக்கிறேனென்கிட்டநீர்வாருமவள்
வீட்டிலே கிடக்கிறான் போய்க்கூப்பிட்டுப்பாருங்
கள்ளியங்கேயில்லையென்றுசொல்லிவிடுவாள்உம்மை
காயக்கம் பண்ணித் தலைதொட்டாணையிடுவாள் [க்
பள்ளிவார்த்தையின் மயங்கி யென்னத்தைக்கேட்டீர் [சுற்றிப்
பார்த்தீரில்லையவளையென்வார்த்தையைக் கூட்டீர்
தள்ளிநடந் தாலவனைத் காணவேமாட்டீர் பள்ளன்
தன்னைவெளியாக்கிப்பின்போம் பண்ணைநயிந்தே 40

இளையபள்ளி வரவு

கவிப்பா

தள்ளரிய கீர்த்தி சிவசயிலேச ரன்பூரா [டவனார்
னுள்ளபடி சொன்னதெல்லாமோர்ந்து பண்ணையாண்
மெள்ளநின்றுகேட்டிளையாள்வீட்டில்விசாரித்தவுடன்
வள்ளமுலையாள் வெளியில் வந்துநின்றுசொல்வாளே 41

இளையபள்ளி முறையிடுதல்

சிந்து

குச்சுக்குள்ளே பள்ளனை நான்
வைத்துக்கொண்டில்லையென்பேனே
நயினாரே-தானிக்
குளமுடைத்துப்போச்சென்றந்தக்
குளமடைக்க நேற்றே போனா நயினாரே
மச்சுக்கட்டோ சீர்வீடு சோ
திக்கக்கண்டாற் பிச்சும்போடும் நயினாரே-சொரி
மழைக்குணடந்தா ணுறுங்
கழைக்கும் நிலையாவெள்ளம் நயினாரே
அக்கரையிற் சென்றானே
யிக்கரையினின்றானே நயினாரே-உடைப்
படைக்குஞ் சுழிக்கொதுங்கிக்
கடக்க விலங்கினானே நயினாரே
கைக்குள்ளே படலுந் தலைக்குள்ளே
யலையுமாறுமாய் நயினாரே-சென்ற
கட்டழக னிராத்திரி நா
னிட்ட சோறுமுண்டா னில்லை நயினாரே

உம்முடனே தாறுமாற

சம்மதியாச் சொல்லப்போமோ நயிந்தே-வெள்ளி

யுதிக்குமுன் வருவேனென்று

னதுக்குள்ளே யமிழ்ந்தினுனே நயிந்தே

தும்மலுங் கெவுளி சொல்லுஞ்

செம்மையாயிருக்கவில்லை நயிந்தே- பாலுஞ்

சோறுமிட்டு வளர்த்து மீறவிட்டுப்

பார்த்திருந்தீர் நயிந்தே

அப்படியேயொன்றுனலு முயி

ரெப்படி தரித்திருப்பே னயிந்தே எங்க

ளாண்டவனுர் சிவசயி லேசருக்கு

சேதமல்லவோ நயிந்தே

துப்புமொழி மூத்தாளவள்

தப்பிதமேசொல்வாள்காணும் நயிந்தே- மெய்

[யாய்ச்

சும்மா நினையுமவ

னும்மாணை யில்லையிங்கே நயிந்தே 42

பள்ளன் வரவு

கலிப்பா

தென்று சொல்லிநடந்து பண்ணையான்களத்திற்
லுமுன்பு வந்தான் சிறுக்கி யிளையாள் வீட்டி
லேயென்றதேது பள்ளா எங்கள்சயிலேசர்பத்துக்
வென்று சொல்லாமலாடுவைப்போமென்றனே. 43

பண்ணைக்குராம் வைக்க ஆயரை வருவித்தல்

சிந்து

க்கூடிடையனுடுங் கெட்டியாகவிப்பொழுது
ட்டிவருவேனென் றிடைக் குடியிலே சென்றான்
நாளாய்ப் பெரிய கோனை னின்றுகொண்டு
வருவேனென்று
ங்க ணையினுருக்கு நா னென்னசொல்லுவேன்
சொல்லேமாறை யழ கப்பன் முதலியாராய்ய
ர்கள் பண்ணைக்கிடையாச்சு தங்கேவருவோ [க
தகீர்த்தியன்பூர்ச்சயிலர்பண்ணைக்குராம்வைக்
நமென்று பள்ளன்சொல்ல வருவோ மென்றார்
கள். 44

ஆயர் வரவு

கலிப்பா

நந்தேறு தன்கடனை நன்னதிக்குத் தென்கரையா
செந்தேனி தழிச் சிவசயில நாதர்பத்தில்
வந்தேறிய குடும்பன் வார்த்தை தப்பாதாலேவைக்
சந்தேகமின்றிச்சயிலக்கோன் வந்தானே.

ஆயர் பெருமை கூறல்

சிந்து

வட்டமுக நெற்றிமிசையிட்ட திருநாமமும்
வலக்கையிலே தடிக்கோலும் விரியோலையு
மெட்டிலேடு பத்துடல முட்டநிறை நாமமு
மிடக்கையிற் கடசாலும் பால்களும்
சுட்டிமறியஞ்சாறு தொங்குமிரு தோள்களுஞ்
சூலாட்டுச் சோங்களும் பாலாட்டுச் சோங்க
சட்டமாய்க் கொண்டுவந்து சிவசயிலநாதனுர்
தனிப்பண்ணைக் குரம்வைக்கச் சயிலக்கோ
[தான்

உரம் வைக்கும்படி சொல்லல்

கலிப்பா

ளையுங் கூட்டிவிட்டுப் பண்ணையார்காயனுடன்
க்ளுமறியொன்று குளத்தூரய்யன்பேர் சொல்லிவி
ள்ளிவளநாட்டின் மூளைத்தவான்பூர்ச்சயிலர்க் [ட்டு
ளவயல் காண்பிவித்து வரமேற்றச்சொல்வானே. 47

சிந்து

ணையானிடையன் முகம்நோக்கிச் சயிலேசர்
த்து வயல்களுக்கு வகை சொல்லுவான்
ணர் விளைவு தம்பைமேடுஞ் சாமிதிருச்
ன்னதி வட்டமு மழுகல்க்கரையு
ணிலாப்புரவா சப்பத்துங் குறுவைப்பத்து
ருளிவட்டத்துடன் மற்றுள்ளவயலும்
ணன்மாரிடையனையுங் கூட்டியுரமேற்றென்
வுப்பக் குடும்பனும் வயலுக்குள் நடந்தான். 48

க்கோனுட்டை வளர்த்திடவே மலையேறிக்
ாண்டு புல்லுத்தேடப்பயம் விடுப்பான்

சம்புக்கோனுட்டையிங்கே காணேன் வனஞ்சூர்
தன்னிற்பொது வாட்டினுடனிருந்தான்
கம்புக்கோனுட்டை முன்புதானே யந்தக்
காளிகனமாட்டினில் விடுத்தேனென்முன்
வம்புக்கோ தேடியலைந்ததல்லா லிவர்களையிம்
மனித சென்மத்தினிற் காணேனென்றே.

நம்பிக்கோன் வெள்ளாடுந் திரளாக
நல்லதம்பிக்கோன் செம்மறியாடுஞ்
செம்பக்கோனுடைய வாத்தாடு மிதுவல்லால்த்
திட்டுமுட்டுக் கோனுடைய ஆடுந்
தம்பிச் சாக்கோனுடைய ஆடும் வயல்களெங்கும்
சயிலக்கோ னுட்டினுடன் மறித்தே
பம்பிக்கோன்களையு மறியாமலுடனெழுந்து
பள்ளனிளையாள் வீட்டினில் நடந்தான்.

மூத்தபள்ளி முறையீடு

கலிப்பா

ஆட்டினுக்குள்ளே கிடவா தந்தரங்கமாயிளையா
வீட்டினுக்குட்போன பள்ளன்மேற்சாடி மூத்த

றூட்டினுக்குள் வாழ்சயிலநாதர் பண்ணைக்காரனுட
'னட்டினுக்குள் அட்ட வணையிட்டவர்போற் சொல்
வாளே. 51

சிந்து

ர்னத்தைச் சொல்வேன் நயிந்தே
ன்னத்தைச் சொல்வேன் பள்ளன்
எனைத் தினம் வையிருன் அதை நான்
தனித்துரை செய்பிறேன்;
ன்னிப்போய் வளையான் வேலைக்கு
ர்னிப்பாயிளையா ளுடன் தினஞ்
சுகித்திடப் பிறந்தான் அதுகொண்டு
யயர்க்கிடை மறந்தான்;
னிச்சையே பிழைப்பா னவளிடம்
ான்னுக்கே வுழைப்பான் நாளொரு
தாத்துக்குப் பாக்கை கேட்குமுன்
னறுப்பா னென்னுக்கை;
பின்னே செய்திடுவான் சுபடங்க
ளெண்ணிக் கைவிடுவான் உம்மோடு

பேசினதறிந்தா லென்னைக் கொன்று
போடுவானெண்டே.

பால்ப் பசுதெரியான் றெரிந்ததை
மேய்த்து மேதிரியான் பாப்பான்
பள்ளத்தைக் கண்ணால் பார்க்கவும்
முள்ளத்திலெண்ணான்;
கால்ப் புரவறியான் இளையாள்.
மேல்ப் பிரமைபிரியா னொருநாள்
கரும்புக்குள்ளேகான் கரும்புக்குங்
கரம்பைக்கும் போகான்;
நாற்பது பொன்வட்டுக் குளம்பாற்
சோத்தினுக்கிட்டுச் சாப்பிட
நாள்வழி கரைத்தான் மறவர்கள்
மேலதையுரைத்தான்;
சால்ப்பன்றிக் கன்பாய்த் தினமொரு
சூல்ப்பன்றி திம்பா னவன் செயுந்
தடித்தனமறியீர் மாத்தினி
லடித்திடுறாண்டே.

ளஞ்சியந் திறந்தான் பதத்தினி
ளந்திட மறந்தான் வாரிநெல்
கனபெட்டி யெடுத்தான் ஈழுவப்
பயல் கிட்டக்குடுத்தான்;
ளங்களினடக்கும் பருவங்கள்
டங்கியேகிடக்கு மவன்மொண்டிக்
கூத்துக்கள் விருப்பால்த் தினந்தினம்
பாத்துக்கொண்டிருப்பான்;
ளைந்திடும் வயல்கள் மாட்டா
லடிந்திடுஞ் செயல்கள் கேட்டால்
வீடுவிட்டசையான் சேதமென்
றோடுதற்கிசையான்;
வளஞ்சிறப்புழவ னெனக்குச்
சளஞ்செய் சக்களவன் சவுக்கால்
வடுப்பட அடித்தா லொழிந்தவன்
பயப்படா ஞண்டே. 54

எச்சுக்குப்பிறந்தான் வரவரக்
கூச்சத்தை மறந்தா னிளையவள்

இளமையைக் குறித்தான் முதிருமென்
வளமையைப் பறித்தான்;
நீச்சுக்குமேலே நிலைப்பென்ன
பேச்சுக் கையாலே யுழைப்பதை
நினைப்பதுந் தொல்லை தேடியே
தளைப்பதுமில்லை;
தீச்சுட்டதாறும் பழித்திடு
நாச்சுட்ட தேறு மவனைமுன்
சீயென்றுபோட்டே னினி
வாயொன்று காட்டேன்;
பேச்சிட்டுப்பாரும் மரக்கணு
வாச்சிக்குத் தீரும் பயப்படப்
பிடித்ததும் பிடியாய்க் குட்டையி
லடித்திடு மாண்டே. 55*

---

* 55, 56, 58—64: இச்செய்யுட்கள் ஏட்டிற் காணப் படவில்லை. பிரபந்தம் பூர்த்தியாதற்பொருட்டு முக்கூடற் பள்ளு என்ற நூலினின்றும் எடுத்துச் சில மாறுபாடுகளுடன் இவைகள் சேர்க்கப்பட்டன.

குடும்பன் கிடையிலிருந்தவன்போல் வரவு

கலிப்பா

த்தர்சயிலேசர்பண்ணையாண்டவனார்முன்புநின்று
த்தமுறமூத்தபள்ளி செய்திசொல்லிப்போனபின்பு
ாய்த்தமொழிபேசிமுதற்போனபள்ளன்மீண்டுஎரு
வத்தவன் போலலுத்து வருவதென வந்தானே.56

சிந்து

ன்றை விளைவுதும்பை மேடு அஞ்சுமாக்
கட்டளை பாட்டிமான் கரையுடனே
கரிச்சுட்டான் பள்ளஞ் சித்தி ஞயக்கன்
கரையுடனே வாழைப் பள்ளத்திலும்
ன்ருருஞ் சென்னகரிக்குள மிருளி
வட்டங் குட்டியார் பள்ளத்துடனே
தானிக்குளமு மருதங்குளந் திருச்
சன்னதி வட்ட மழுகல்க் கரையும்
பண்ணைப்புரவெல்லாங் கோரம்
பள்ளங் குறுவைப் பததுடனே
பச்சைகுத்தி மேட்டுடனே குட்டியார்
பள்ளம் பாப்பான் பள்ளத்திலும்

மெண்ணூறு மாசப் பத்து முரலடிமே
டெல்லா முரம் வைத்தே
னின்று திரும்பினேன் யின்னந் தேவரீ
ரேவல் விரும்பினேன் பண்ணையாண்டே.

அவனைத் தொழுவின் மாட்டல்

கலிப்பா

எந்தைசிவ சயிலேசர் பத்திலெருவாடு வைத்த
திந்தவித மோஅந்த இளையாள்வீட் டுறக்கமோசெ
சிந்தைதொட்டுப் பாரெனக் கண் சீறிப்
பண்ணையாண்ட கை
வந்த பள்ளன்காலில் மரக்கட்டை யடித்தானே.

இளையபள்ளியிடம் பள்ளன் சொல்லல்

சிந்து

முடுகவாரகசியமுண்டு குண்டுணிக்காறி
மூத்தபள்ளி பார்க்க வருவாள்
நடுவே தெய்வஞ் சோதிச்சுதே அய்யய்யோபண்ணை
நயினாருக்குச் செவி கண்ணூச்சுதே
கடுக நீ போய்விடு சும்மா சகதியிலே
கல்லெறிந்த கதையாக்காதே

வடுவந்தான் மறைக்கப்போமோ வருவதெல்லாம்
வந்தேதிருமடிகையிற் பள்ளி. 59

இளையபள்ளி புலம்பல்

பழிகாரியன்பூரிற் பள்ளி சாடுசெய்த
பள்ளனென்று முகம் பாராமல்
வழிபோற களவெல்லாந் தலையின்மேல்
வலித்திட்டுப் பத்துக்குழித்தாள்
கொழியலரிசியிட்டாலுங் குப்பையைக் கிண்டுங்
கோழியென்பதைப் புதுக்கினாள்
அழியாத காசழியுமோ நானேது செய்வேன்
அண்ணல் சிவசயில நாமப் பள்ளா. 60

மூத்தபள்ளி யடிசில் கொண்டுவரல்

கலிப்பா

தாமிரண்டானாலுந்தன் கணவன் வாஞ்சையினால்
வாரமுடனே முள்ளிவள நாட்டில் வந்த பள்ளி
காரணம் வேறென்று பண்ணைக்காரனுக்குச்
சொல்லிமெள்ளச்
சோரமுடன் பள்ளனுக்குச்சோறுகொண்டுவந்தாளே. 61

சிந்து

எங்கே கிடக்கிறான் பள்ளன் நயினாரே
    என் விண்ணப்பமொன்றுண்டு
செங்கானெனக்கு மூத்தவ னெதுக்கோ
    தெய்வத்துக் காக்கிவைத்தானா
மங்கேயிருந்து சட்டியிற் கறியுஞ் சோறு
    மனுப்பினானதைத் தனித்துண்பேனோ
உங்களடியானுக்குக் கொடுத்தா லதையவ
    னுண்பானோ வுண்ணானோ யாண்டே. 62

மூத்தபள்ளி பள்ளனுடன் சொல்லல்

மருந்துக் கள்ளியடி கையிற்பள்ளி அத்தாள
    நல்லூர்விட்டு வந்தபிறகு
திருந்தப் பேசின வார்த்தையுங் கேளாய் நான்
    தெற்கே பார்த்தால் நீ வடக்கே பார்ப்பாய்
பருந்தாட்டங் கொண்டாய் கொப்பத்திலே யானை
    பட்டாப்போல் மரத்தில்ப் பட்டாய்
பொருந்தத் தன்வினை தன்னைச் சுற்றும் விதி
    பொய்க்குமோ சொல் சிவசயில நாமப் பள்ளா. 63

அவனவளோடு கூறல்

ிஞ்சிப்போனதை யேன் சொல்லவேணும்
விருந்துவிட்டபின் வெட்டுவதுண்டோ
கொஞ்சப் பேச்சுச் சொல்லாதே வாய்த்தண்ணீர்
குடித்தாலுங் கொப்புளித்தலாமே
பஞ்சிற் பற்றும் நெருப்புப்போல் நெஞ்சிற்
பழம்பகை பற்றவையாதே
கெஞ்சிப் பண்ணை நயினாரை மன்னிப்புக்
கேட்டுப்பாரடி யன்பூரிற் பள்ளி. 64

அவள் மறுத்தல்

முட்டிவிட்டுக் குனியும் பழங்கதை
மூதலிக்கிறாய் பேதலித்துப் போய்
கெட்டி கெட்டி யிளையாள் சொல்
கிழட்டுப் பள்ளிசொல் பண்ணையார்க்கு
அட்டி நான் பேசப்போமோ அரண்மனைக்
காரிய மென்கைக்குள்ளே யுண்டோ
வட்டிலுக்கு வாய்வாய்த்த தெல்லாந்துறை
வளர்கடனைத் துறை சிவசயில நாமப்பள்ளா. 65

அவனவளை மன்னித்தல்

பக்குவஞ் சொல்ல நீதியோ நானிந்தப்
பாடுபட்டுமறியேனே
சக்களத்தியவளென்று நீ
சரி சொன்னால் தாழ்ச்சியுனக்கே
மக்களாணை யென்னாணை யுன்னாணை நீ
வார்த்த கஞ்சி குடிச்சுக்கிடப்பேன்
விக்கல்வாய்ப் பண்ணையாளைப் பார்த்து
மீட்டுக் கேளடி யன்பூரில்ப் பள்ளி. 66

அவளவனை மீட்கவேண்டிப் பண்ணைத் தலைவனைப் பரவல்

கலிப்பா

என்றுரைத்த பள்ளன்மார மீண்டுவிடவேணுமென்று
குன்றுமுலைமூத்தாள் தன்கொட்டிலிலும்போகாமற்
சென்று தமிழன்பூர்ச் சிவசயிலர் கோவிலைத் தொட்
டன்று வருகின்ற பண்ணை யாண்டவன் முன் சொல்
வாளே. 67

சிந்து

தேவரீர் நிற்குந் திசை நோக்கிக் கும்பிட்டேனாண்டே
பின்பு
சித்திரைக்கன் னை யெங்குந் தேடினேனாண்டே
ஆவசியங் குட்டியார் பள்ளத்திற் சென்றேனாண்டே
நாச்சி
யார்பற்றுந் தேடிக்காணாமலிங்குகண்டேனாண்டே
நான்வந்தகாரியம்விண்ணப்பஞ்செய்கிறேனாண்டே
பள்ள
னைஞ்சு நாளாக மரத்திற் கிடப்பானே ஆண்டே
ஆன்வந்துவேங்கை பசிக்கப்பட்டாப்போலாண்டே
வந்
தகப்பட்டுக் கொண்டானிலக் கோயிலன் பண்
ணையாண்டே. 68

ஓடி யொளித்தவன் போனாலு நான்பிணையாண்டே
வேலை [மாண்டே
யொன்றிற் குறைந்தா லன்றைக்கென்னைக் கேளு
சாடி சொன்னேன் மெத்தச் சாரியங் கொண்டதா
லாண்டே சித்தந்
தான்வரவேணடப்பாணினிமேற்பண்ணையாண்டே

பண்ணைப் பயிருக்குந் ததிகாலம் வந்தது ஆண்டே
கோவிந்
பத்துகளெல்லா மூரங்களும் வைத்துதே ஆண்டே
கண்ணுக்கினியனென் பள்ளனல்லோ பண்ணையாண்
டே அவன்
காலின்மாத்தைக் கழற்றிவிடவேணுமாண்டே. 69

மேழிவித்து முதலியவளங் கூறல்

கலிப்பா

துப்புமொழிமூத்தாள் தன் சொற்படி பண்ணைக்கார
னெப்பிமரம் விட்டாடை யொன்றளித்துக்கேட்ட
[திலே
அப்புறமன் பூர்ச்சயிலர்க் காட்படும்பள்ளன் களத்திக்
வைப்புவகைமேழிவித்துமாட்டுவகைசொல்வானே70

சிந்து

கதித்த சீர்க்கனமேழி தன்னைக் காரக்
கட்டார் காட்டாதடக்கிக்கொண்டார்கள்
குதித்த ராவண வீரத்தை வானரக்
குழூமுபாயமாய்க் குத்தி மறைத்தார்

உதிக்கும் வேளை மன்னுகமாறை யுமை தன்
சேயெடுத்து வைத்துக்கொண்டான்
ததிக்குள்ளவடங் தன்னைக் கந்தப்பன் நீலனுஞ்
சதிரிட்டே வைத்திருக்கிறுனண்டே. 71

சந்தனத் தேக்கைப் போய்ச் சுத்திப் பார்த்து
சயிலமான் பர்ப்பதந்தன்னில் வெட்டி
சுந்தரம் பெறவே யேர்க்கால் மரக்கால்
துளைத்திடுங் குத்திமேழி உளக்கோல்
அந்த மான் கயமரமும் வள்ளக் கை
யாயிரம் நோக்காலுடன் கொழுவும்
எந்தையார் பண்ணைக்கே யுழவேற்றன
மிப்படிக்கு வைத்திருக்கிறேனண்டே. 72

வித்து வகை

சீரகச் சம்பா முள்ளுச் சம்பா நற்
சிறு வெள்ளை பெரு வெள்ளை செஞ் சம்பா
பாரில் மெய்ப்புறு செம்பாளை நம்பிச்
சம்பா சொக்கன் சம்பா காடைக்கழுத்தான்

நேர்மை சோரானைக் கொம்பன் மிளகி
திறைபொலி மலைமுண்டன் குறுவை
சேரிலே யிரு பூவும் விளைவித்து
சேர்த்திட்டேன் வந்து பாத்திடாண்டே. 73

மாட்டு வகை

சூலைக் காளையைக் காணாமல்த் தேடி
தொழுமறைக் காளை போச்சுது காணாது
நீலக்காளை கைக்கம்பெடுத்ததென்று
நீந்துவாரியில் வீழ்ந்து கிடக்கும்
காலிற்சேர்ந்த பெருவாதக் காளையைக்
காணலாம் வடமேற்றிசை சென்று
வேலவே யிப்படிப்போனதல்லா
விருக்குங் காளைக்கினி வகை சொல்வேன். 74

மட்டைக்கொம்பன் விரிதலைக்கொம்பன்
மயிலைக்காளை குறுவொற்றை ணாடி
கொட்டைப்பாக்கன் பச்சக்களச்சிக்கண்ணன்
கூடுகொம்பன் கருமேகவண்ணன்

பட்டடைமீறி சூடுபிடிங்கி
பருத்தசெம்மறை யானைச்சுழியன்
மூட்டிக்கால்தட்டி போற்காளை தாங்கல்
முழுதுங்களத்தினில் நிற்குதாமாண்டே. 75

நாளேரிட முகூர்த்தம் பார்த்தல்

சவிப்பா

ஆளேர் விதைப்படையெல்லாமுளைத்த பள்ளனுடன்
வேளேயெரிய விழித்தசயிலேசர் பதத்
தாளே தலைமேற் சுமந்த பண்ணையான் வயற்குள்
நாளேரிடமுகூர்த்தம் நாட்பார்த்துச்சொல்வானே. 76

நாளேரிட்டு உழவர்கள் உழுதல்

சிந்து

தேசமிவியாழபூசம் அமிர்தயோகஞ்
சிங்ககரணஞ்செயஞ் செயம் பஞ்சாங்கம்
சிமாயலக்னமீன மென்றுமறையோர்
நெடுநேரமாய்ந்து பார்த்து முகூர்த்தம் விதித்தார்
அசுகையிலேயென்றன்பூர்ச்சயிலநாத
ராண்டார் பண்ணைக் கேரிடவேணுமென்றே

யிசமானன் பண்ணைக்காரனுக்குளைக்கக் குடும்ப
னேருங்கலப்பையுங் கொண்டெழுந்து நடந்தான். 77

மாடனணைஞ்சான் கால்குட்டியிருளன்
மருதன் பெரியான் சாத்தன் வன்னியுடையான்
வேடன் கலுங்கன் மொண்டிப்பூலான் சுந்தன்
வேலன் புலியன் புங்கனுலான் சடையன்
சாடிக்கலியன் கப்புக்காலன் காத்தான்
சண்ணை முருகன் சிங்கன்றடிக்கால்ச் சங்கன்
கூடியிவ்வகைப் பள்ளரேரைப்பூட்டி
குரவையிட்டே எல்லாருங் கூடியுழுதார். 78

காளை வெருளல்

தன்னேரமுழுதபின் விட்டுப்பூட்டுங்காளைகள்
பூட்டும்பொழுதோர் காரிக்காளை
தனியே முறித்துக்கொண்டு மேற்கேவோடச்
சகலரும் பின்னேவோடித்தவித்து
மனது துணிந்துகொண்டு சயிலக்குடும்பன் [தான்
மரிப்பேனென்றோடிக்கொம்பை மறித்துப் பிடித்

னைதைக்க கையை சற்றே நெகழ்த்தான்
முதுகூடு பாயவீழ்ந்து மூர்ச்சையடைந்தான். 79

பள்ளிகளிருவரும் வருதல்

கலிப்பா

ன்னடிமைக்கின்னறவிர்க்குஞ் சயிலரன்பூர் [கிடக்க
பான்னடிகைப்பற்று பள்ளன் பூமியில் வீழ்ந்தே
ன்னடி வீட்டுக்காரி மூத்தபள்ளி பார்க்கவரத்
தன்னடிகையூராளுஞ்சீக்கிரத்தில் வந்தாளே. 80

மூத்தபள்ளி புலம்பல்

சிந்து

லைகள் மூதற்பிடுங்கி யெறிந்திடுவா யெண்ணுமல்
மாதம்பிடிப்பாய் நாலு கடுவாய்
பெலபிடிக்கொண்டே சுறுக்கோடெழுந்தாய் தனுவங்
கெட்டபேரைப்போல மாடுகுத்த விழுந்தாய் [ளி
தலையிலயனெழுத்தனக்கிப்படியோ அடிகையிற்பள்
சளக்காறி மருந்துவெறித் துடியோ
பலகவலையொழிய வொன்று சொல்லடா சயிலேசர்
பண்ணைப்பள்ளா வெழுந்திருந்து நில்லடா. 81

இளையபள்ளி புலம்பல்

புண்படாமேனியிற் புண்பட்டுதே யதின்மேலே
புழுதியெலாமிகப் புரண்டுவிட்டதே [பை
திண்படாக்கெருவ மனப்பெலத்தால் காளைக்கொ
சென்றோடிப் பிடித்தாய் கைத்தலத்தால் [பள்
பண்புபோற் பார்த்துக்கொண்டு நடப்பாள் மூத்
பற்றுக்குறித்தே சிரித்துக்கிடப்பாள்
நண்பர்மகிழ்ந்திட சுறுக்கோடெழுவாய் சயிலர்திரு
நாமப் பள்ளா யேர்ப்பூட்டி உழுவாய். 8

பள்ளனெழுந்து நிற்றல்

கலிப்பா

[செவிக்கு
துன்பமொடு பள்ளியர்கள் சொன்மொழி யெல்லாஞ்
ளன்பினுடனேறுதலா லாயாசம் போய் விழித்து
தன்பரஞான் பூர்ச்சயிலேசர் தம்மருளா
லின்பமொடு பள்ளனெழுந் தேர்பூட்ட நின்றானே.
83

உழுது விதைத்தல்

சிந்து

டந்த பள்ளனெழுந்து நின்று பள்ளியர்முன்று
லஞ்சடி
நடந்துசென்றுகுழைத்துகுறுநகைபுரிந்திட்டானே
ந்தனையு மிறுக்கி மறுத்துழுஞ் சிருக்கோர்பூட்டி
வயலெல்லாந்தரிசழித்துமறுத்துழுச்சாலடித்தான்
டர்ந்து துடர்ந்துழுததிலே பறம்படித்துப் பொரு
ம்புதட்டி
சூழயலே வாழ்த்தி குளத்தூரய்பனை வாழ்த்தி
ந்தருமன் பூர்ச்சயிலர் திருவடியைக் கருத்தில்
வைத்து
திருத்துதெளி தனக்குள் விதை தெளித்துமனங்
களித்தான். 84

தளித்தவிதை கரிச்சுட்டான் பள்ள மண்வெட்டிக்
காரன் [விடுத்தான்
திருத்துந் தினம் நீர்ப்பாய்ச்சித் திரும்ப வெட்டி
ளைத்தமுளை யொருசாணில் மிஞ்சிவளர் நாற்றை
வயல்
முழுதும் நடவேணும் நல்லபருவமிது பிடுங்க

களிப்பிஞெடு மதுக்குடித்து குதித்துச் சிவசயிலர்
கனத்த பண்ணைக்காரனிரு காலில் வீழ்ந்துரை
வெளிக்குளே மாட்டைவிடு கலப்பையெடு கயிற்
யெ
மிகுதியோர் பூட்டெனவே விரைந்து பள்ளன
[தான். 8

பண்ணைத் தலைவர்க்கறிவித்தல்

கலிப்பா

சந்ததமுமன் பூர்ச்சயிலேசர் பத்திஞுக்கு
ளெந்தவயலின்று முவதென்று பள்ளன் கேட்பதி
விந்தைபெறு பச்சைகுத்தி மேட்டுழ வென்ருய்ந்
பண்
முந்தவிசாரிப்பான் மொழிந்தபடி சென்ருனே. 8

சிந்து

பச்சைகுத்தி மேட்டுழவு பொற்கோரம் பள்ளமுந்
தெளிப்படவேயில்லை யென்
றிச்சை யாயதிஞலஞ்சாறும் வேற்றமு முவித்தே
மிச்சமாய்க் கயமாமடித்து
விளையும் வயற்குள் பொரும்பு மிதித்து

விளங்கு தெளிக்குள் நாற்றைப் பிடுங்கி
மிகுதி குவித்தபின்
ுச்சமில்லாமற் பண்ணையாண்டார் கை
யான் மஞ்சணையோ டெண்ணெ வாங்கி
யாக்கந்தரும் வெத்திலைபாக்கையுமீ
சானத்திலமைத்தே
ச்சவானக் கனத்தை வாழ்த்தி
யும்பர்கோனையும் வாழ்த்தி
யலையொக்க வாழ்த்திக் குரவை
பரவை யொலிபோன் முழக்கியே. 87

நடவு ஆரம்பித்தல்

ண்ணை நயிந்தே நாற்றையெடுத்து
பாரக்காத்தால் தாருமெனவே
பாமசயிலர் பதத்தைத் தாங்கிப்
பரிந்து வாங்கியே,
ண்ணை யொழுகி வழியநுதலி
விரண்டு முதலைப் பகிர்ந்து வைத்துப்பின்
னெட்டுத் திசையு நோக்கியுடன் கும்
பிட்டுவாழ்த்தியே,

கண்ணாடி கையிலேய பள்ளியுங்
கனதைக்கார மூத்தபள்ளியுங்
கதித்து நிரையை வகுத்துத் தெளிக்குள்
கால் வைத்திறங்கியே,
மண்ணில்க் குளித்து நெருங்காமல் கல
வாமல் குரவை மூன்று மெழுப்பி
மகிழ்ச்சியுடனே நாத்தைப் பதிக்க
வாரும் பள்ளீரே.

கட்டைப் பெரியாள் மருந்தி யருந்தி
கலைச்சி வலைச்சி காத்தி சாத்தி
கப்புக்காலி நெட்டை யணைஞ்சி
கருப்பியாவுடை,
மொட்டச்சி சின்னச்சிவனி காக்கை
மூக்கி பேச்சி நாச்சி யிருளி
மொண்டி சடைச்சி திருவிகாளி
மூக்கறைக்கூளி,
ஒட்டாரக்காரி பொதுவி நாயி
ஆற்றுக்கண்ணி யாட்டுக்கண்ணி

யொட்டால் மாடி வீரிமாரி
வோரிக்கால் செவிடி,
ட்டைவயிறி பொக்குவாச்சி
குருந்தியுஞ் செங்கைச் சுருக்கிலுடனே
கூட்டி யொருவர்க்கொருவர் தாம் நட்டுக்
காட்டும் பள்ளீரே. 89

நடவுநடல்

கலிப்பா

லைச்சிலையை வைத்தசடைக் கர்த்தர்சயிலேசர்பண்ணை
லைச்செய் நடவேயோடி திற்பரமாய் வந்த பள்ளி
லைச்சுமைநாற்றிற்போய்த்தலைகொடுத்தபள்ளனவன்
லைச்சுவடு தைக்க வொரு முத்தமிட்டுக்கொண்டா
னே. 90

சிந்து

னைநதித் தென்கரையின் முளைத்த
காரணர் பரிபூரணர்
கருணைக் கடவுளென்னும் பரம
கலியாணிக்கிசை மோகனர்

குடதிசைதனில்த் திரும்பினோர் சிவ
சயிலநாதர் பண்ணையில்
குட்டியார் பள்ளத்துடனே யஞ்சுமாக்
கட்டளை வயல் நடச்செய்தே
வடகரைப் பள்ளி தலையிலே யெண்ணை
வழியவே நிற்கும் நிலையிலே
மலையிலே யுயர்முலையிலே விழி
வலையிலே யிழைக் கலையிலே
யுடையுடுத்திய யிடையிலே மெள்ள
வடிபெயர்த்திடு நடையிலே
வுள்ளங் கொதித்துப் பள்ளன் மயங்கி
துள்ளுறுன் பாரும் பள்ளீரே.

வெள்ளிமலையஞ் சாரலருகில்
மேற்கே முகத்தை நோக்கியே
விருப்பத்தோடெழுந்தருளியிருந்த
விமலர் கமலச் சரணினர்
புள்ளிமானைக் கரத்திலே வைத்து
கொள்ளுமேன்மைப் பரமனர்
புகழன்பூர்ச் சிவசயிலேசர் பண்ணை
பொற்கலந் தூக்கி நடச்செய்தே

வள்ளலாறை யழகப்பன் பண்ணைப்
பள்ளி சிவனி கடைக்கண்ணால்
வாவென்றாள் துள்ளிப் பாக்குப்பிளவு
தாவென்றாளில்லைப் போவென்றாள்
வள்ளி யெழும்பி மடியைப் பிடித்துச்
சோதித்தாள் மனம் பேதித்தே
தொட்டதுக்கவள் முலையைப் பிடித்துக்
கட்டினான் பாரும் பள்ளீரே. 92

ழைக்கை மதனை யெரித்த மத்தகக்
கண்ணினார் மலைப் பெண்ணினார்
கயிலையங்கிரிவாசனார் சிவ
சயிலான்பூரிலீசனார்
ழைத்த புகழ்ச் சென்னகரிக்குளமு
மருதங்குளமு வளமைசேர்
தாணிக்குளமுமுராவடி மேடுஞ்
சட்டமாக நடச்செய்தே
ளைத்தகச்சினி பிந்தினாள் நடு
முழத்திய ரொக்கமுந்தினா

றென்றவள் மயிர் பிடிக்கின்றானறை
யொன்றினில்த் துடிதுடிக்கின்றாள்
கொழுத்த சேற்றினில் விழுகிறாளுன்னைக்
கும்பிட்டேனென்று தொழுகிறாள்
குறுக்கைத் தாங்கிணைப்போல் பெண்ணுடம்பைச
குடும்பன் பார்க்கிறான் பள்ளீரே 9

தன்மதுரை சங்கரநாரணன்
மன்மதன் முன்பு வந்தவன்
தருப்பணி செங்கை யழகப்பன் செய்யுந்
திருப்பணிமிஞ்சு கோயிலார்
புன்மதியெனக் கொழித்தவர் சிவ
சயிலநாதர் பண்ணையில்ப்
புகழ்ப்பெறும் புவி முகந்தான் திருத்துப்
புரவு முழுதும் நடுகச்சே
நன்மைப்பட்டொரு மாடியே நடும்
நடவை விட்டுப் போட்டோடியே
நவ்வல்த் தோட்டத்தி லொதுங்கினாள் பண்ணை
நயினாரைக் கண்டு பதுங்கினாள்

ர்மதன் துயர் நடக்கவே பள்ளன்
வகையறிந்ததை யடக்கவே
மாட்டாதவன் போய்த் தொட்டெளம்பாடிப்
போட்டான் காணும் பள்ளீரே. 94

த்தர் சடையிற் பிறையினாலை
தத்து கடனைத் துறையினார்
கலைவல்லோன் புகழன்பூரிற் சிவ
சயிலநாதர் பண்ணையில்
த்திநாய்க்கன் கரையும் நாச்சியார்
பத்து மண் வெட்டி நடச்செய்தே
திருத்துமடத்துத் திருத்துங் கட்டளைத்
திருத்து மொருநாள் நடச்செய்தே
த்தி பள்ளத்திற் பள்ளியுஞ் சாட்டுப்
பத்து வெள்ளச்சி வள்ளியுஞ்
சண்டை பிடித்துக் கலக்க நட்டதைக்
கண்டு பள்ளன் பண்ணையார்க்
த்தரமென்ன சொல்லுவனென்ன
பத்திப் பிடித்துத் தள்ளினு

னுடுத்தகலை களவிழ்ந்த வரம்பிற்
கிடப்பதைப் பாரும் பள்ளீரே. 95

எள்ளத்தனையு மன்பில்லாரிடத்
துள்ளத்தயவு பின்பில்லார்
றெங்கள் சயிலநாதர் பண்ணைக்
கிசைந்த வாழைப் பள்ளமுந்
துள்ளிக்கயல்கள்குதிக்கு மழுகற்
களையும் பாப்பான் பள்ளமுந்
தும்பைமேடும் பாட்டிமான்களைச்
சுற்றுஞ் சன்னதிவட்டமும்
பள்ளக்குறுவைப் பற்றுமாசப்
பற்றுங்கோரம் பள்ளமும்
பச்சைகுத்தி மேடும் விரைந்து
பகிர்ந்துவருமது நடுகச்சே
கள்ளுக்குடித்த வெறியில் மருதி
காவிற் குதித்த கெண்டையைக்
கண்டாள் பயந்து குடும்பனைக் கட்டிக்
கொண்டாள் பாரும் பள்ளீரே. 96

ந்தரர்க்கொரு தூதனார் சிவ
சயிலநாதர் பண்ணையில்
தோன்றுமிருளியடி வட்டமுங் கரிச்
சுட்டான் பள்ளமிதுவல்லால்
தினைப்பணி யழகப்ப னூழா
பூசைக் கட்டளை உச்சந்திக்
கட்டளையுட னத்த சாமக்
கட்டளை வயல் நடுகச்சே,
சந்திக்குடும்பன் கொழுந்தியா ரென்று
திருகி முலையைப் பிடிக்கின்றான்
சித்தப்பன் மூத்த னதுகண் டவனைச்
சென்னை தகர வடிக்கின்று
சந்தக்குடும்பன் சும்மாநின் றவ
னெல்லாருஞ்சென்று தகர்த்திட்டார்
ளெப்பமாயொரு சிறுக்கியால் வந்த
சளத்தைப்பாரும் பள்ளீரே. 97

பயிர்கள் வளர்ந்து விளைதல்

கலிப்பா

ஐந்தருத் தென்னுறையழகப்பன் வங்கிசமெல்லாரு
சந்ததமும்வர்த்தனையாய்த் தான்வளர்ந்து வாழ்க
செந்தமிழன்பூர்ச் சிவசயில நாதர்பண்ணைச் [பே
சொந்தவயற்குண்டவு சோராமலோங்கியதே.

சிந்து

நட்டசீர் வயலெல்லாம் நட
வெட்டுகொளையில்தேறி
நற்குருத்துகள் வாங்கிக் குழைந்
துட்கருப்புகளோங்கி
முட்டின்மேலனையளவாய் வளர்ந்
திட்டபோதரைத் திரண்டு
முதிர்சூற் பொதிகாட்டிக் கதிர்
முழுதுந் தலைநீட்டி
சிட்டர் போற்றியசயிலே சனை
யிட்டமாயழகப்பன்
சிரமே வணங்குதல்போல் பயிர்
தலையானது வணங்கிச்

ட்டமாய் விளைந்ததிலே பள்ள
ட்டகாசங்கள் செய்தே
தனியே வந்துசொன்னார் நல்ல
தென்றே பண்ணை யைனர். 99

நாட்கதிர் கொண்டு அறுவடை செய்தல்

ருநாள்க் கதிர் கொண்டா ரறுப்
பது சீக்கிரமென்றார்
சிலர் கூறுகள் தெரிந்தார் வயல்
அழியாது டனரிந்தார்
ரிவாய்ப் பரப்பரிகாய்ந்த பின்
வெகுவாய்ப் புரிமுறுக்கி
விளைசாலி கட்டிறுக்கிக் களே
மேற் போர்வைத்துச் சரித்து
பரிதாய்ப் பல பிணையல் பிடித்
தடிப்பார் மறுகளமும்
பேர்ப்பார் வைக்கோல் தவிரப் பொலி
குவிப்பார் சளகெடுப்பார்

பரிவாய்ப் பொலிதூற்றிப் பத
  ரோடப் பதர்மாற்றிப்
பத்தியால் பிள்ளையார்தமை வைத்
  தப்பாற் பள்ளனெழுந்தான். 100

நெல்லளத்தல்

கலிப்பா

தார்க்களத் தன்பூர்ச் சயிலேச ராண்டவனூர்
சேர்க்களப்பதெத்தனை நெல் செப்புமிதுவல்லால்
ஆர்க்களப்பதென்று பண்ணையாண்டவனூர் சொற்படி
[நெல்
போர்க்களத்தில்பள்ளன்பொலியளந்து
[சொல்வானே 101

சிந்து

பங்கூனி மாத்தைத்
  திருநாளுக் காயிரங்கோட்டை நெல்லுப்
பாட்டத்தில் வாங்காமல்
  பண்ணைக் களத்தினில் அளந்தேன்;
செங்கான் பிறப் புள்ளிப்
  பாட்டத்திலெண்பது கோட்டை நல்ல

செம்பாளை நெல்லு
தினம் பூசைக் கன்பாக அளந்தேன். (1)

றை யழகப்பன்
சாலையின் மண்டபப்படிக்கே கோயி
திவருப்பாய் முன்னூற்
தன்பது கோட்டை நெல்லளந்தேன்;
லு திருப்பணி
வேலைக் கொருமாத்தைப் படிக்கு பள்ளான்
வலானவர்க்கு நெல்
நாலாயிரங் கோட்டை யளந்தேன். (2)

ல மதிதவழ்
சோலைக் குளத்தூரய்யருக்கே நித்த
ழை பெய்ய வேணுமென்
றெழுபது கோட்டை நெல் அளந்தேன்;
லு மணையு
முடையாமல்ச் சாவல்லார் தமக்கும் வெள்ளைக்
ல்ப் பூதத்தாருக்கு
முப்பது கோட்டை நெல் அளந்தேன். (3)

கையுங் கணக்கும்
விளங்கிய சூரியதேவன் தம்பான்
கட்டுஞ் சிவசயி
லப் பிள்ளையார்கள் மண்டபத்தில்
ஐயர் சயிலமொழுந்தரு
ளுஞ் சிறப்பினுக்கே கோயி
லதிக வகுப்பாக
அறுபது கோட்டை நெல் அளந்தேன். (4)

கோயில் பரிசன
நம்பிமார் தானத்தார் தலத்தார் பத்திக்
கொண்டது நாற்பது
கோட்டை மலைமுண்டன் அளந்தேன்;
ஆயக்க மாமொரு
பூவுக்கு நூற்றெட்டுக் கோட்டை பற்றும்
அண்ணாவி நட்டுவனார்
மேளத்தாருக்கு அளந்தேன். (5)

பொசிக்கக் குலைவாளை
யரிசிக்கு வலைக்காரர் கொண்டார்கள் சோமப்

புயல் வண்ணர் பெருமணல்
வாரியைக் கைப்பற்றினரோ;
சத்தால் பெரு வெள்ளை
யைச் செட்டியாரேத்துக்கொண்டார் மத்த
நெல்லும் வித்தும் களத்
துக்குள் கட்டுக்கிடை ஆண்டே. (6) 102

மூத்த பள்ளி முறையீடு

கலிப்பா

ன்றுகணக் கும்வழக்கும் நேருரைத்தே னெனக்
கணக்கை [மென்றே
யான்றுமுறை யாதபள்ள னுள்வினயங் கேளு
ன்றுண்டாந் தார்சயிலர் வாழுமன்பூர் மூத்தபள்ளி
சன்றுநின்ற பள்ளியர்முன் சிந்தைவெப்பஞ்
சொல்வாளே. 103

சிந்து

நமுகப் பண்ணையாண்டே
நடுக்கேளாரோ கண்ணி
ற்றுவடிப் பண்ணையாண்டே
நடுக்கேளாரோ!

வாரமில்லாப் பண்ணையாண்டே
நடுக்கேளாரோ பொக்கு
வாய்க்கிழட்டு பண்ணையாண்டே
நடுக்கேளாரோ!
நாரைமூக்குப் பண்ணையாண்டே
நடுக்கேளாரோ கரு
நாக்குநீட்டிப் பண்ணையாண்டே
நடுக்கேளாரோ!
தாரமிரன் டிப்போவைத்த
குடும்பன் செய்யுஞ்
சர்ப்பனையை உற்பனமாய்க்
கேளும் பள்ளீரே. 10

கள்ளப்பள்ளனுக்கடிகைப்
பள்ளிமேன் மோகந் தீரக்
காணேனிந்தத் துன்பப்பட்டு
நாணமில்லையே

ள்ளத்தயவாற் கனத்த
பிள்ளையாரடி நெல்லு
றையுமவள் பெட்டிநெல்லே
டொக்கவேவைத்தான்
பிள்ளப்படாதென்றிருந்தால்
மோசமல்லவோ பங்கு
வீதந்தருமலெனக்கு
சேதஞ்செய்யிறான்
தள்ளிப்போட்ட மண்ணும் நெல்லுங்
கல்லும் விரவி யொன்றாய்ச்
சர்த்தெனக்குத் தந்தானிதைப்
பாரும் பள்ளீரே. 105

பள்ளிகளொருவருக்கொருவர் ஏசல்

ண்டக்கூத்தேனுடுகிறாயன்பூரில்ப்பள்ளியும்தன்
வாரக்கத்தை சீரக்கத்தை வாங்கிக்கொண்டேனே
ண்டபேர்சிரிக்கப்போறார் வாய்திறவாதேபண்ணைக்
காரருடன் நீவைததைக் கூறவேணடி (1)

கூறினுலெனக்கென்னடி யடிகையிற்பள்ளிசென்று
கூறிப்பாருன் வார்த்தையவற்கேறுமாகிலே——
யேருதவார்த்தையுமுண்டோயன்பூரில்ப்பள்ளியன்
னென்வசமோ வுன்வசமோவெண்ணிப்பேசடி (

பேசும் வடிப்பக்காரி யடிகையிற் பள்ளியெந்தன்
பேச்சையவன் கேட்டாலிந்த யேச்சுவருமோ——
வசுகிறேனென்றுசொன்ன அன்பூரில்ப்பள்ளி
வார்த்தை
இளைத்தாலுடனேசகாயமெடுபட்டுப்போச்சே (

எடுபட்டுப்போகாமலுனைத் தடிகையிற் பள்ளிவந்
யென்வாழ்வுஞ்சோறும்பறித்தாய்நன்மைதானே
உடைபட்ட தேங்காய்ப்பல்மூளி யன்பூரில்ப்
பள்ளி கொண்டு [டாமே
முன்னைக்கண்டருவருப்பாயென்னைக் கொண் (

கொண்டவனல்லவே பள்ளன் அடிகையிற்
பள்ளி முற்றுங்
கொத்தடிமையாய்ப் பள்ளனைக்கொண்டவள் நீ

வண்டவேசை யூாட்டமாடு மன்பூரில்ப்பள்ளியிந்த
வாய்கண்டல்லவோபள்ளனுன்மேல்வாரமறந்தான்
(5)

வாரமறவானே பள்ளனடிகையிற்பள்ளி கீரை
வளர்லையிலே புல்லுருவி வந்து கைக்கொண்டாய்-
ஊாறிய நாடறிய யன்பூரில்ப் பள்ளி முந்த வுன்னைக்
கொண்டான் வாழவுண்ணா யோகமற்றுயே (6)

யோகமற்றுப் போனெலென்ன யடிகையிற் பள்ளி
யிரந் [தேனே—
துண்ணவென்று நானுன் திண்ணை தன்னில்வந்
சேகரிப்பில்லாதிருக்கு மன்பூரில்ப்பள்ளிவோட்டில்த்
, திட்டமா யிரந்த துங்கள் சிவனூல்லோடி (7)

கையிலோடுமில்லாம லடிகையிற்பள்ளி வுங்கள் [ன்-
கண்ணன் மண்ணைத் தின்று மாவடியிற் கிடந்தா
பெய்யுமுகில் வெள்ளிவரை யன்பூரில்ப்பள்ளி மாடு
பிடித்தேறிக்கொண்ட துங்கள் பேயனல்லோடி (8)

பேயனெங்க ளையன்மார்தாம் யடிகையிற்பள்ளிமுன்
பேய்முலை குடித்ததுங்கள் நாயனல்லோடி— [ப
நாயன்மார்பேர் தம்மை யிங்கே நாமிருவோருஞ்சற்
நாவினாலே உச்சரிக்க ஞாயமுண்டோடி [றும்
(9

இல்லாததைச் சொன்னார்குறை யடிமையிற்பள்ளி
மாட்டை [லோடி—
யிடையன் வீட்டில் மேய்த்ததுங்கள் கடவுளல்
அல்லடி யன்பூரில்ப்பள்ளிமாட்டினன்மேயும்பொது
வாட்டுடனே நிற்பதுங்கள் அத்தனல்லோடி (10)

மாதையொரு பக்கத்தில் வைக்குந் தவசிதான் என்று
மழுவெடுத்து நிற்பதுங்கள் மலைவில்லானேடி—
நீதியோ சொல் கோபியரை மேவியந்தநாள்
நெய்யிலே கையிட்டானுங்கள் நீலனல்லோடி (11)

தாமதமில்லாமல் வீரபத்ரனை யேவி மாமன்
தக்கனைக் கொன்றதுமுங்கள் சம்புவல்லோடி—

மாமனென்றுஞ் சற்றெண்ணமைல்க் கஞ்சனைக்
கொன்றே யொரு
வார்த்தைகட் கொண்ட தாங்கள் மாயனல்லோடி (12)

ம்முடைய ஆண்டமார் செய்யுங் கூத்தையே நம்மால்
காவிலைடக்கிச் சொல்ல ஞாயமுண்டோடி பார்த்
நாமிருவோரும் விருதாவாக்குத் தோசங் கட்டிக்[தால்-
கொண்டோமே வீணிலே நாமும் (13)

பெண் புத்தியாய்க் கொஞ்சம் பேச்சு பேசிக்
கொண்டோமே யிரு
பேரையும் ரட்சிக்கும் அன்பூர்ப்பித்தால்லோடி-
திண்பட்டாலல்லவோ தெரியுமினி யெல்லாமினிச்
சேகரமாய் வாழ்ந்து சிறப்பாக விருப்போமே. (14)
106

கலிப்பா

மட்பார் மேலொருதாள முண்டகத்தாள் வாழுமன்பூர்
ட்பான லப்பரம கலியாணி வாழியவர்
ட்பார் சிவசயில நாயகனுர்மேற் சயிலப்
பட்பாட லோங்கியிந்த பார்வரைக்கும் வாழியதே.
107

முற்றும்.

பிழை திருத்தம்

பாட்டு.	வரி	பிழை.	திருத்தம்.
9	6	னென்னையன்	னென்னையவன்
42	2	வைத்து	வைச்சு
,,	5	போனு	போனுன்
,,	27	தரித்திருப்பே னயிந்தே	தரித்திருப்பே நயிந்தே
55	குறிப்பு	64	66
66		மன்னித்தல்	மன்னிப்புக் கேட்கும்ப வேண்டல்
75	8	போற்	போர்க்
76	4	ஷா	நா
79	7	நெகழ்	நெகிழ்
84	8	வாழ்த்தி	வாழ்த்திக்
87	3	வேற்றமும்	மேற்றமும்
94	6	பண்ணையில்ப்	பண்ணையில்
,,	7	புகழ்ப்	புகழ்
96	3	ரெங்கள்	எங்கள்

பாளையங்கோட்டை பிரிண்டிங் பிரஸ்—15—11—1918